நிவிதிகல பிரதேச சபையி - 2023

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிவிதிகல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நிவிதிகல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஒரு கணனியின் பெறுமதி ரூபா 1,329,000 அதிரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் சரி செய்வேன். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 59,950 தொகை காசேட்டிற்கும் வருமான பேரேட்டிற்கும் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் சரி செய்வேன். | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டிற்கான கடை வாடகையை பட்டியலிடுதல் ரூபா 1,368,600 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | ரூபா 152,229 மொத்த தொகையான இயந்திரங்களும் உபகரணங்களும் மற்றும் நில அளவைக் கட்டணங்கள் என்பன மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | ரூபா 143,090 தொகையான நூல் நிலையப் புத்தகங்கள் இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சம்பளங்கள் மற்றும் உறுப்பினர் படி | மாகாண சபையிடமிருந்து மீளளிப்புச் செய்யாத இப்பணம் இன்றுவரை | மாகாண சபையுடன் கலந்தாலோசித்து தீர்த்துவைக்கப்படுதல் |

| | | |
|---|---|---|
| மீதியை அத்திகதியில் உள்ளவாறான துணைப் பதிவேடுகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 95,000 வித்தியாசம் காணப்பட்டது. | நிலுவைச் சம்பளமாக முன்கொண்டு செல்லப்பட்டது. | வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா 27,200,050 மொத்த தொகையான 02 கணக்கு விடயங்களின் விபரமான பட்டோலை சமர்ப்பிக்கப்படவில்லை | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்காய்விற்காக தகவல்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 10,163,238 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 5,713,191 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்த வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரியும் வரியும் | 2,886,773 | 2,717,766 | 3,224,717 | 859,010 | 2,574,429 | 2,698,119 | 2,645,318 | 1,285,333 |
| வாடகை | 18,891,250 | 8,844,162 | 8,838,856 | 76,800 | 13,053,700 | 7,688,250 | 7,517,814 | 147,990 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,680,700 | 1,258,985 | 1,258,985 | - | 1,163,590 | 1,026,705 | 1,026,705 | 1,500 |
| ஏனைய வருமானம் | 3,303,900 | 4,584,540 | 9,101,521 | - | 2,507,250 | 3,164,210 | 3,163,442 | - |
| மொத்தம் | 26,762,623 | 17,405,453 | 22,424,079 | 935,810 | 19,298,969 | 14,577,284 | 14,353,279 | 1,434,823 |

### 2.2.2 வருமானத்தை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 709,134 தொகையான நிலுவை வீதவரி மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ரூபா 289,699 மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது. | ஆதனங்களை தடைசெய்வதற்கான இறுதி அறிவித்தல் தயாரிக்கப்பட்டு வருகின்றது. நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக நடமாடும் நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டன. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான ரூபா 116,327 தொகையான நிலுவை ஏக்கர் வரி மீதியில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ரூபா 104,558 மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது. | இதற்கான இறுதி அறிவித்தல் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |
| (இ) | 2023 ஆம் ஆண்டிற்கான கழிவுப் பொருள் கட்டணங்களை அறவீட செய்வதற்கு 2022 நவம்பர் 04 ஆந் தகிதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசித்தப்பட்டிருந்தும் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கழிவுப் பொருள் கட்டணங்களை அறவீடு செய்வதற்கான மீளாய்வு முடிவடைந்துள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | பொதுச் சந்தை கடைகளுக்குள் நீர் கசிவதனை திருத்தம் செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்காததனால் ஒரு கடைச் சொந்தக் காரரினால் ரூபா 52,000 வாடகை செலுத்துதல் மறுக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிலிருந்து மூடப்பட்டுள்ள அக்கடையை திருத்தம் செய்து மீண்டும் ஒப்படைக்கும் வரை கடை வாடகையினை அறவீடு செய்ய முடியாதுள்ளது. | திருத்தம் செய்வதனைப் பூர்த்தி செய்து வருமானத்தை சேகரித்தல் வேண்டும். |
| (உ) | நகரத்தில் வாகனங்களை நிறுத்திவைப்பதற்குத் தேவையான வசதிகள் இல்லாததனால் வாகன உரிமையாளர்கள் கட்டணங்களை செலுத்துவதனை நிராகரிப்பதன் காரணமாக கட்டணங்களை அறவீடு செய்தல் நிறுத்தப்பட்டுள்ளது. | கேள்வியை நிராகரிக்கும் வரையான காலம் தொடர்பாக அறவிட வேண்டிய கட்டணம் ரூபா 45,000 தொகை உடன்படிக்கை பிணையாளரிடமிருந்து அறவிடப்பட்டுள்ளது. | தேவையான வசதிகளை வழங்கி வருமானத்தை சேகரித்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| தயாரிக்கப்பட்ட சேதனப் பசளைகள் தரம் குறைந்தவை என நிலைபேறான விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் அறிக்கையிடப்பட்டிருந்தது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டில் ரூபா 580,000 தொகைக்கு கொள்வனவு செய்த உக்குகின்ற கழிவுப் பொருட்களை துண்டுகளாக வெட்டுகின்ற இயந்திரமானது மூன்று வழி மின்சாரம் இல்லாததன் காரணமாக 2023 நவம்பர் மாதம் வரை விளைவற்றுக் காணப்பட்டது. | பசளைகளின் தரத்தினை அதிகரிக்கச் செய்வதற்கும் மூன்று வழி மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுப்பேன். | திண்மக் கழிவுகளை முறையாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட முன்பள்ளி கண்காணிப்பாளர் பதவி இல்லாதிருந்தும் 2005 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை 02 முன்பள்ளி கண்காணிப்பாளர்களுக்கு ரூபா 454,000 செலுத்தப்பட்டிருந்தது. அவர்களில் ஒரு கண்காணிப்பாளர் சேவையிலிருந்து விலகியிருந்த போதிலும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மற்றைய கண்காணிப்பாளர் ஒரு மாத்திற்கு 03 நாட்கள் மாத்திரம் முன்பள்ளிக்கு வருகை தருகின்றமை உறுதிப்படுத்தப்பட்டது. | சேவை செய்யாது இப்படியினைப் பெற்றுக்கொண்ட கண்காணிப்பாளருக்குச் செலுத்திய ரூபா 20,000 பணத்தை மீளச் செலுத்துமாறு ஒரு மாதத்திற்கு 03 நாட்கள் மாத்திரம் வருகை தருகின்ற கண்காணிப்பாளருக்கச் செலுத்திய ரூபா 20,000 பணத்தை மீளச் செலுத்துமாறும் கடித்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை வேண்டுதல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆபத்தான 18 மரங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதற்காக விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தும் எந்த பதிலும் கிடைக்கவில்லை. மீண்டும் விலை மனுக்கள் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஆபத்தானது என்பதனால் மரங்களை தாமதமின்றி அகற்றுதல் வேண்டும். |

## 3.4 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| விபத்:துக்குள்ளாகிய ஒரு கலிபவுசரினை திருத்தம் செய்வதற்கு ரூபா 585,000 தொகையான மதிப்பீடு காப்புறுதி நிறுவனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அதற்கு காப்புறுதி நிறுவனத்தின் இணக்கப்பாடு கிடைத்திருக்காததனால் அந்த வாகனம் 2021 நவம்பர் மாதத்திலிருந்து இன்று வரை பயன்படுத்தாது காணப்பட்டது. | காப்புறுதி இழப்பீடு கிடைக்காது விடுமாயின் பொறுப்புக்கூற வேண்டிய நபரிடமிருந்து அறவீடு செய்வதற்கு உட்பட்டு திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு இணங்க தேவையான திருத்தம் செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. | சொத்துக்கள் பயன்படுத்தாமல் வைக்காதிருத்தல் வேண்டும். |